**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**E.A.2/2024**

**in**

**EP 17/2024**

**ம.சா.–1 – நாகராஜன், த/பெ.துரைச்சாமி**

**நாள். 01.09.2026**

**ம.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மோசடி ஆவணம் தயார் செய்தது சம்மந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த குற்றப்பத்திரிக்கை மற்ற சம்மந்தப்பட்ட ஆவணங்களை சான்றாவணமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் 26.06.2013 ல் எஸ்.பி.யிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகார் ஒட்டன்சத்திரம் டி.எஸ்.பி மூலமாக ரெட்டியார்சத்திரம் சிறப்பு ஆய்வாளர் 3 தினங்களுக்குள் விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். இந்த புகார் சம்மந்தமாக ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டதா என்றால் இல்லை. சிவில் வழக்கு என்பதால் சிவில் நீதிமன்றத்தை நாடுமாறு சொன்னார்களா என்றால் இல்லை. புகாரில் நல்லபெருமாள் என்ற ராஜன், பாலசுப்பிரமணி என்ற கண்ணன் ஆகியோர் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் நிலஅபகரிப்பு பிரிவில் இரண்டு புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரின் மீது காவல்துறையில் நடவடிக்கை எடுக்காததால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நிலஅபகரிப்பு முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வுநாள் 22.08.2012 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.12.2012 என்றால் சரிதான். என்னை காவல்துறையில் நல்லபெருமாள் என்ற ராஜன், பாலசுப்பிரமணி என்ற கண்ணன் , வழக்கறிஞர் மாரிவேல் ஆகியோர் கும்பலாக 24.02.2013 அன்று காலை 08.00 மணி அளவில் எங்கள் சொத்தில் மல்லி, சுண்டல் பயிர் செய்த போது அத்துமீறி நுழைந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் நான் வாக்குமூலம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன், குறிப்பாக எதற்காக என்று ஞாபகம் இல்லை. 2 வது நில அபகரிப்பு புகாரில் முதலில் ரெட்டியார்சத்திரம் போலிசார் விசாரித்த போது சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயார் அசல்

வழக்கு 2372/1990 திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது பற்றி மேற்படி புகாரில் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. மைனர் சொத்தை கிரையம் வாங்குவதற்காக வைப்பீடு செய்தது சம்மந்தமாகவும் அதற்கான ஆவணத்தை இணைத்து இந்தமனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். EA மனுவில் சர்வே எண். நான்கு மால், விஸ்தீரணம் பற்றி குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் தாக்கல் செய்த வழக்கை நடத்த விருப்பம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயாருக்கு அந்த சொத்தில் உரிமை இல்லாததால் அவர் வாரிசு என்ற முறையில் நானும் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. மதுரை உயர்நீதிமன்றத்தில் AS.176/2016 ல் லோக் அதாலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து தான் WP.No.12377/2021 என வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான், ஆனால் மேற்படி வழக்கானது லோக் அதாலத் தீர்ப்பிற்கு எதிராக போடவில்லை. WP.No.12377/2021 மனுவில் மோசடி ஆவணங்களை ரத்து செய்யுமாறு பரிகாரம் கேட்டிருந்தேன் என்றாலும் அந்த பரிகாரத்தை நீதிமன்றம் வழங்கவில்லை என்றால் சரியல்ல. அந்த உத்தரவை பொறுத்து 2ம் எண் சார்பதிவாளர் விசாரணை செய்த என் மனுவின் மீது எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் நடவடிக்கை நிறுத்தி வைப்பதாக உத்தரவு பிறப்பித்தார். நான் ஏற்கனவே தாக்கல் செய்த CRP.No.2110/2021 ல் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றம் Maintainability யில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் தக்க உத்தரவு பிறப்பிக்க பரிந்துரை செய்து பின்பு மேற்படி EA, 1/2020 மனுவானது வாபஸ் பெற்று விட்டேன் என்றால் சரிதான். ஏற்கனவே தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்த பின்னிட்டு இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு இந்த நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். சுப்பையா தேவரின் பேரன்களான மைனருக்கு உயில் எழுதி வைக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் பதிவு கட்டணம் அதிகமாக ஆகும் என்பதால் உயில் எழுதி வைத்தார். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள விவரங்களுக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. உயில் மற்றும் மாவட்ட பதிவார், 2ம் எண் இணை சார்பதிவாளர், எனது மனுவின் மீது பிறப்பித்த உத்தரவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தின் அமீனா சுவாதீனம் எடுக்க வந்த போது நான் சொத்தில் இருந்தேனா என்றால் அமீனா வரவேயில்லை. சுவாதீனம் ஒப்படைக்கப்பட்ட விவரம் தெரிந்துதான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வி.எ.ஒ, தனி நபர் சாட்சிகள் முன்பு 1ம் எதிர்மனுதாரருக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதி பேராணை மனு, இந்தநீதிமன்றத்தில் தாக்கல் செய்த EA.1/2020 மனு மற்றும் என் தாயார் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.

2372/1990 ல் ஏற்பட்ட உத்தரவு அனைத்தையும் மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. AS.64/2002 கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தீர்ப்பாணை விவரத்தில் மேல்முறையீட்டார்கள் வாதிகள் தாக்கல் செய்துள்ள மேல்முறையீடு, தாவா பி -தவசு சொத்தை தவிர மற்ற எ -தவசு சொத்துக்கள் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது என்றும், வரிசை எண்.2ல் எ- தவசு சொத்தை பொறுத்து திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண். 329/1997ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் இரத்து செய்யப்படுகிறது என கண்டுள்ளது என்றால் சரிதான். என் மனுவில் கீழமை நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பும் தீர்ப்பாணையும் இரத்து செய்யப்படுகிறது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி மேல்முறையீட்டில் எ-செடியூல் சொத்து வரிசை எண்.6 முதல் 10 வரை உள்ள சொத்துக்களை பொறுத்தும் 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு சமூகம் நீதிமன்றம் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தது என்றால் தெரியாது. மேற்படி AS தீர்ப்பிலேயே பி- செடியூல் சொத்தை பொறுத்து என் தாயார் உரிமை கொண்டாடி இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய குற்ற வழக்கு சம்மந்தமாக Crlop.2594/2023 ல் 1ம் எதிர்மனுதாரர் குற்ற வழக்கை இரத்து செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மாண்புமிகு உயர்நீதிமன்றம் அவர் கீழமை நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. ஆகவே இந்த மனு செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை -இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.09.01 21:25:50 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.